REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55530

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆடி 17உ செவ்வாய் (2—8—55) ★ ★ வெளியூர்: ஆடி 18உ புதன் (3—8—55) [இதழ் 42

'மேயரு'க்கு அபராதம்!

லெத்பிரிட்ஜ் (அல்பெர்டா), ஆக. 1—

லெத்பிரிட்ஜ் நகரசபைத் தலைவர் (மேயர்), கடையில் காப்பி அருந்துவதற்காக, தெரு ஒன்றைக் கடந்த போது, போக்குவரத்து விதிகளை அனுசரிக்காமல் கவனக் குறைவாக சாலையைக் கடந்த குற்றத்திற்காக உள்ளூர் நீதிமன்றம் ஒன்றினால் ஒரு டாலர் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறாராம்.

காமராசர் திறமே திறம்!

மாநில உரிமையைக் காத்தாராம்!

மூலப் பிரச்னைக்கு முகமூடி!

டில்லி பரவசப்படுகிறது!

திராவிடக் கழகத் தலைவர் திரு. ஈ. வெ. ரா. அவர்களின் கொடி எதிர்ப்பு ஆர்ப்பாட்ட முயற்சியை சமாளித்த விதம் குறித்து, தலைநகரில், சென்னை சர்க்காருக்குக் குறிப்பிடத்தகுந்த பாராட்டு கிடைத்திருக்கிறது.

இந்த விஷயத்தில் நடவடிக்கை எடுக்க, மாநில சர்க்காருக்குள்ள உரிமையில், மத்திய சர்க்கார் தலையிட முயற்சித்த யோசனை கேலிக்குரிய ஒன்றென தகவலறிந்த வட்டாரங்கள் கருதுகின்றன.

இந்தப் பிரச்சினைக்கு மத்திய சர்க்காரின் ஆலோசனையோ, உதவியோ தேவை இல்லை என்ற கொள்கையையே முதன் மந்திரி காமராசர் தலைநகர் வந்திருந்த போது கடைப்பிடித்ததாகத் தெரிகிறது.

காமராசருக்கு சென்னை மாநில மக்கள் தரும் ஆதரவு, இங்குள்ளோருக்கு நன்கு தெரிந்தே இருக்கிறது. மேலும் சென்னை சர்க்கார், தங்களின் 'சுதந்திரத்தை'க் காப்பாற்றிக்கொள்வதில் எத்தனை உணர்வுடையவர்களாயிருந்திருக்கின்றனர் என்பதும் தெரிந்தே இருக்கிறது.

அந்தக் குறிப்பிட்ட சூழ்நிலையில், அந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடுவது மாநில சர்க்காரின் ஒருவகை விசேடமான பொறுப்பு என்றே துவக்க முதல் கருதப்பட்டு வந்தது.

மத்திய சர்க்கார், இப்பிரச்சினையில் ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்குமானால், அது, தேசியக் கொடியின் புனிதத் தன்மையை மாநில சர்க்காரைவிட, மத்திய சர்க்காரே அதிகம் உணர்ந்திருப்பதாகப் பொருள்படும்படி அமைந்திருக்கக்கூடும்; அத்தகு ஒரு எண்ணம் உருவாவதை, சென்னை சர்க்கார் விரும்பியிருக்கமாட்டார்கள்.

இரண்டாவதாக, இந்த ஆர்ப்பாட்டம், முக்கியமான ஸ்தலப் பிரச்சினையின் விளைவாக எழுந்ததாகும்; அந்தப் பிரச்சினை, அரசியல் சட்டத்திற்கு ஒப்பவும், மக்களின் விருப்பத்திற்கு இணங்கவும் பரிகாரம் தேடவேண்டிய ஒன்றாகும்.

இந்த இரண்டு காரணங்களின் படியும், திரு. ஈ. வெ. ரா.-வின் கிளர்ச்சியை வாபஸ் பெறச் செய்த, முதன் மந்திரியின் அறிக்கை, ராஜதந்திரச் செயல் போன்றது என்று மதிக்கப்பட வேண்டியதாகும்.

கிளர்ச்சியினால் எழுப்பப்பட்ட பிரச்சினைக்கு முடிவு கட்டியது மட்டுமின்றி, திரு. காமராசர் தேசியக் கொடியின் புனிதத்தன்மையையும் காப்பாற்றிருக்கிறார்.

—(சென்னை 'மெயில்' இதழில் காணப்படுவது.)

'தீண்டாமை ஒழிப்பு' சுவரொட்டியை எதிர்ப்போருக்கு அர்ப்பணம்!

"தீண்டாமை, சந்தேகமற— வேகமாக மறைந்துகொண்டிருக்கிறது; என்றாலும், சில இடங்களில் தீண்டாமை தலைகாட்டத்தான் செய்கிறது;

"ஒரு இரயில்வே ஜங்ஷனில் வேலை செய்யும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கு அங்குள்ள சைவ தேநீர் நிலையத்தில், சோடா புட்டி ஒன்றில் தேநீர் தரப்பட்டதை நான் கண்ணுற்றேன்; அந்தத் தாழ்த்தப்பட்ட தோழர், வெகு சுத்தமாகத்தான் இருந்தார்; என்றாலும், அவருக்குக் கண்ணாடி டம்ளரில் தேநீர் தர மறுக்கப்பட்டது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது; கடைக்காரரிடம் இதுபற்றி விசாரித்த போது, அவர், அந்தத் தாழ்த்தப்பட்ட ஊழியர், ஒரு 'மதாரி' வகுப்பைச் சேர்ந்தவர் என்றும், அதனால்தான் கண்ணாடி டம்ளரில் தேநீர் தரப்படவில்லை என்றும் கூறக் கேட்டேன்;

"இதுபற்றி, உடனே, இரயில் நிலையத்திலிருந்த 'புகார் புத்தகத்'தில் குறிப்பெழுதினேன்;

"சர்க்காரின் தீண்டாமை ஒழிப்புக் கொள்கை, கடுமையாக அமுல் செய்யப்பட வேண்டும்; வேறு பல இரயில் நிலையங்களில்கூட, இம்மாதிரி தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேறுபாடு காட்டப்படுவதை நான் கண்ணுற்றதுண்டு; ஆனால், அவை பற்றி அதிகாரிகளிடம் புகார் செய்ய முடியாமற்போனதற்குக் காரணம், அந்தத் தாழ்த்தப்பட்ட ஊழியர்கள் விஷயம் தெரிந்தால் மேலதிகாரிகள், ஏதேனும் வேறு சாக்குகளைக் கூறி தங்களைத் துன்புறுத்துவர் என்று அஞ்சுவதாகக் கருதுவதுதான்;

"இந்தக் குறிப்பிட்ட சம்பவத்தின்போது, அந்தத் தாழ்த்தப்பட்ட தோழர் வாக்குமூலம் தருகிற தைரியம் பெற்றவராக இருந்தார்; எனவே, அதிகாரிகள் இதுபற்றி விசாரித்து, இதர கடைக்காரர்களுக்கு ஒரு பாடமாக அமையும்வண்ணம் நடவடிக்கை எடுப்பதின்மூலம், அத்தகு வெட்கப்படத்தக்க பாரபட்சம் இரயில் நிலையங்களில் இனியேனும் நடைபெறுவண்ணம் பார்த்துக் கொள்வர் என்று நம்புகிறேன்,"

—என்று, மேலூரில் (மதுரை) உள்ள அகில இந்திய அரிசன சேவா சங்க வட்டார அதிகாரியான சுவாமி ஆனந்த தீர்த் என்பவர், சென்னை ஆங்கில இதழ்களில் கடிதம் ஒன்று வரைந்திருக்கிறார்.

மதுவிலக்கினாலா?

புதுடில்லி, ஆக. 1—

"மது விலக்கினால், தீய-உடம்பைப் பாழாக்குகிற—தவறான 'சரக்கு'களைக் குடிப்பதினால், சென்னை இரயில்வே காலனியில் வாழ்பவர்களில் 10-க்கு 9 பேர்கள் குருடர்களாகவோ அல்லது குருடர்களாகும் நிலையிலோ இருக்கிறார்கள்," என்று மக்கள் சபையில், பிராங் அந்தோனி என்பார் குறிப்பிட்டிருக்கிறார்.

அனந்தபூரில் உள்ள தமிழ் மாணவர்கள்

சென்னை மாநில சர்க்காருக்கு வேண்டுகோள்

அனந்தபூர், ஆக. 1—

சென்னை மாநிலத்தைச் சேர்ந்தவர்களும், அனந்தபூர் எஞ்சினியரிங் கல்லூரியில் பயில்பவர்களுமான 35 மாணவர்கள் நேற்று கூடி, தொடர்ந்து, தாங்கள் அனந்தபூர் கல்லூரியில் கல்வி பயில்வதில்லை என முடிவு செய்திருக்கின்றனர்.

சென்னை பல்கலைக் கழகப் பட்டம் அளிப்பதாக வாக்குறுதி தந்தால் ஒழிய, தாங்கள் எக்காரணத்தை முன்னிட்டும் அனந்தபூர் திரும்புவதில்லை என்றும் அவர்கள் முடிவெடுத்திருக்கின்றனராம்.

தாங்கள், சென்னை மாநிலத்தில் உள்ள கல்லூரிகளுக்கு மாற்றப்பட வேண்டும் என்றும், அல்லது வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகப் பட்டத்திற்குப் பதிலாக சென்னைப் பல்கலைக் கழகப் பட்டம் தரப்பட வேண்டுமெனவும் சென்னை சர்க்காருக்கு கோரிக்கை தெரிவித்திருக்கின்றனர்.

காஷ்மீரின் எதிர்காலம்:

பாக். பிரதமர் அறிவிப்பு

காஷ்மீர் பிரச்சினை குறித்து எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை செய்து முடிவு செய்ய பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையிலுள்ள எல்லா கட்சித் தலைவர்களும் அடங்கிய மாநாடு ஒன்றைக் கூட்ட இருப்பதாக பாகிஸ்தான் பிரதமர் முகமது அலி தெரிவித்திருக்கிறார்.

மக்கள் சபைமுன் ஆர்ப்பாட்டம்

தடியடி பிரயோகம் செய்த போலீசாரை திரும்பத் தாக்கினராம்

'பசு வதையைத் தடைசெய்ய வேண்டும்' என்று கோரி 3 பெண்கள் உட்பட 30 ஆர்ப்பாட்டக்காரர்கள், மக்கள் சபைக் கட்டிடத்திற்குள் நுழைந்து, பிரதமரிடம் மனு ஒன்று தர விரும்பியதாகவும், அப்போது அவர்களைக் கலைக்க, போலீசார் 'லேசான' தடியடிப் பிரயோகம் செய்ததாகவும் கூறப்படுகிறது.

தடியடிபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், தாங்கள் ஏந்தியிருந்த கம்புகளால் போலீசாரைத் திரும்பத் தாக்கியிருக்கின்றனர்; ஏழு ஆர்ப்பாட்டக்காரர்களை போலீசார் கைது செய்தனராம்.

தொழிலாளிகளைவிட முதலாளிகள் அதிகம்?

அமெரிக்க எஃகுத் தொழிலில் இன்றுள்ள நிலைமை

அமெரிக்க எஃகுத் தொழிலில், இப்பொழுது, வேலை செய்பவர்களைவிட முதலாளிகள்தான் அதிகமாம்!

இவ்வாண்டு ஆரம்பத்தில் எஃகுத் தொழிலில் முதலீடு செய்தவர்கள் எண்ணிக்கை 7,70,000-ஆக இருந்தது என்றும், அது இப்பொழுது மேலும் அதிகரித்திருக்கக்கூடுமென்றும். ஆனால், இத்துறையில் இவ்வாண்டு ஆரம்பத்தில் வேலை செய்தவர்களின் எண்ணிக்கை 7,62,830 தான் என்றும் கூறப்பட்டுள்ளது.

கனிகள், போக்குவரவு, சேமித்தல், எஃகு தயாரிப்பு ஆகிய எல்லாத் துறைகளிலும் வேலை செய்தவர்களின் எண்ணிக்கை இதில் உட்படும்.

'உலோக ஆராய்ச்சி நிபுணர் குழு உருவாக்க வேண்டும்'

'பலஆண்டுகட்குமுன்பே கூறியதை சென்னை செயலாற்றவில்லை'

சென்னை அரசாங்கத்தின் அலட்சியத்திற்கு த. நா. மக்கள் சபை உறுப்பினர் கவலை!

சேலம் எஸ். வி. இராமசாமி எம். பி. அவர்கள் மக்கள் சபையில், சென்னை மாநிலத்தின் உருக்குத் தொழில் திட்டம் பற்றி கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த வர்த்தக, தொழில் இலாகா அதிகாரி ஒருவர், 'பழுப்பு நிலக்கரித் திட்டத்தில் வெற்றி கிடைப்பதைப் பொறுத்துத்தான், சேலம் உருக்குத் தொழில் பற்றி எதுவும் செய்ய முடியும்; இது பற்றிய சென்னை சர்க்காரின் திட்டம், பிறகு ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னை சர்க்கார் தேவை எனக் கேட்டிருந்தது "'லோ ஷாப்ட்' உலையா—'ஹை ஷாப்ட்' உலையா" என்று ஒரு உப கேள்வி கேட்டார் தோழர் இராமசாமி.

"இந்தப் பிரச்சினையில் உறுப்பினருக்குத் தெரிந்திருக்கும் அளவுக்குக்கூட சென்னை சர்க்காருக்குத் தெரியவில்லை," என்று பதில் தரப்பட்டிருக்கிறது—ஆட்சியாளரால்!

'கவலைப்படத் தக்க அளவு, பொழுதுபோக்கு முறையில் மேற்கொள்ளப்பட்டவை' என்று, சில மாநில சர்க்கார்களின் திட்ட சிபாரிசுகளிருப்பதாக மத்திய சர்க்கார் அதிகாரிகள் கருதுவதுண்டு. அதற்கு சென்னை மாநில சர்க்காரும் விதிவிலக்கு அல்லபோலும்!

உலோகங்கள், தாதுப் பொருள்கள் பற்றியும், அவற்றை எப்படி தோண்டி எடுத்து வெளிக்கொணர்வது என்பது பற்றியும் சென்னை அதிக அக்கறை கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்ட போதிலும், இங்குள்ள சென்னை மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர்கள் எல்லாரும், சென்னை சர்க்கார்தான் தவறுகளுக்குப் பொறுப்பாளிகள் என்று கருதுகின்றனர்.

பல ஆண்டுகளுக்கு முன்பாகவே, மாநில அரசாங்கத்திற்கு, தகுதியான யோசனைகள் கூறுவதற்கென பூகர்ப்ப, உலோக, தாதுப் பொருள் நிபுணர்அடங்கிய குழு ஒன்று அமைக்க வேண்டுமென்று கருத்தறிவிக்கப்பட்டது.

அந்த யோசனைக்கு சென்னை சர்க்கார் செவி மடுக்கவில்லை என்று தெரிகிறது.

மத்திய அரசாங்கத்திடமிருந்து உதவியும், ஆதரவும் பெறக்கூடிய பல துறைகளுக்கு மாநில அரசாங்கங்கள், தங்களுக்கு ஆலோசனைகள், நிபுணர் குழுக்கள் வைத்துக் கொள்ளலாம் என்ற ஒரு கொள்கை இருந்தும்கூட, சென்னை சர்க்கார் எதுவும் செய்யவில்லை.

ஆனால் அதே நேரத்தில், மிக முன்னேறியுள்ள கனிகள் தொழில் நுணுக்க அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி இதர வெளி

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 2—8—'55 செவ்வாய்

மலாயா தேர்தல்

உலகத்தின் பரந்த நிலப்பரப்பில், இங்கிலாந்து இராணியின் மணிமுடிச் சின்னம், அதிகாரமும், அடக்கி ஆள—அகப்பட்டதைச் சுரண்ட உரிமையும் கொண்டு விளங்கும் பகுதிகளின் பூகோளப் படத்தில் கிழக்கு ஆசியாவில் உள்ள மலாயாவும் இடம் பெற்றிருக்கிறது.

பொதுவாக, உலகெங்கிலும் 'காலனி' ஆதிக்கத்திற்கு இந்த இருபதாம் நூற்றுண்டில் எழுந்துள்ள எதிர்ப்புச் சக்தியின் தாக்குதலைச் சமாளிக்க முடியாத நிலையில், ஏகாதிபத்தியங்கள் தங்களின் 'காலனி' ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ள புதிய புதிய வேடங்கள் புனைந்து வருகின்றன.

இந்த இராஜதந்திரத்தில் விற்பன்னர்கள் என்ற பெயர்பெற்றுள்ள இங்கிலாந்து, தனக்கு ஆசியா, மற்றும் ஆப்பிரிக்கா முதலிய கண்டங்களில் இன்று வரைகூட காலனிகள் பலவற்றை எத்தனையோ எதிர்ப்புகளுக்கிடையில், தங்களின் ஆதிக்கத்தின்கீழ் வைத்திருக்க முடிவது ஆச்சரியப்படத்தக்கதல்ல!

வேறெல்லா காலனிகளையும் போலவே மலாயாவிலும் வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக, ஜனநாயக முறைப்படி 'அமைதியான வழிகளிலும், 'ஆயுதம் தாங்கிய புரட்சி' வழிகளிலும் சுதந்திரக் கோரிக்கை எழுப்பப்பட்டது.

ஒரு நாட்டு மக்களை எத்தனை காலம் அடக்கி ஆள்வதின் மூலம் அவர்களின் வாழ்வையும், வளத்தையும் கொள்ளையிட முடியுமோ, அத்தனை காலத்திற்கு தன் ஆதிக்கத்தை நீட்டிக் கொள்வதற்காக—காலத்திற்கொப்ப தன் ஆதிபத்திய முறைகளை மாற்றிக்கொள்ளும் 'குணம்' படைத்த பிரிட்டன், மலாயா வாழ் மக்கள், முதல் முதலாகத் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்வதற்கான வழி வகைகளை அமைத்துத் தரும் சட்ட மன்ற ஆக்கத்திற்கான தேர்தல் மூலம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் வாய்ப்பை, கடந்த வாரத்தில் தந்தது.

அமைக்கப்படும் சட்ட மன்றத்தில் 52 பேர்தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களும், கவர்னரால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் 46 பேர்களும் இருப்பர்.

இந்த நிலையில் உள்ள சட்ட சபையும், எல்லாவற்றையும் நிர்ணயித்துவிடும் அதிகாரம் பெற்றதல்ல!

சட்டசபையின் முடிவு, தனக்குப் பிடிக்காவிட்டால், பிரிட்டிஷ் கவர்னர், அந்த முடிவை ஏற்க மறுத்துவிடக்கூடிய அதிகாரம் பெற்றிருக்கிறார்; சட்ட சபையைக்கூட அவர் கலைத்துவிட முடியும்.

இந்த நிலையில் உள்ள சட்ட சபைக்குத்தான் முதல் முதலாகத் தேர்தல் நடைபெற்றது.

மலாயாவாழ் மக்களில் சுமார் 84 சதவிகித வாக்காளர்கள், மலாயா குடிமக்கள்; இதரர்களில் — முஸ்லிம்கள், சீனர்கள், இந்தியர்கள் போன்ற குடியேற்றக்காரர்களாவர்.

'சிறுபான்மையினருக்குப் பாதுகாப்புக்கூட இருத்தலாகாது,' என்று கூறும் தீவிர மலாயாக் கட்சி ஒன்று; மலாயா தேசிய நிறுவனம்—மலாயா சீன சங்கம்—மலாயா இந்திய காங்கிரஸ் ஆகிய மூன்றின் கூட்டணிக் கட்சி மற்றொன்று; — ஆகிய இரண்டு கட்சிகளும், தேர்தலில் பிரதான எதிரிகளாயிருந்திருக்கின்றன.

தீவிர மலாயாக் கட்சி, 52 - இடங்களில் 30 இடங்களுக்குப் போட்டியிட்டு ஒரு இடம் கூட பிடிக்கவில்லை.

'மூவர்—கூட்டணி' 52 - இடங்களில் 51 இடங்களைப் பிடித்து வெற்றி முரசு கொட்டியிருக்கிறது.

'மலாயாவில் ஒரு இஸ்லாமிய ஆட்சி வேண்டு'மெனக் கோரும் மலாயா இஸ்லாமியக் கட்சி, 11இடங்களில் போட்டியிட்டு ஒரே ஒரு இடம் மட்டும் பிடித்திருக்கிறது. தொழிற் கட்சி என்ற பெயரில் நான்கு இடங்களில் போட்டியிட்ட இடதுசாரிக் கட்சி, ஒரு இடமும் பெறவில்லை; அதைப் போலவே, சில வட்டங்களில் மட்டும் 'செல்வாக்கு' பெற்றிருக்கும் வேறு மூன்று கட்சிகளும் போட்டியிட்டு தோல்வியுற்றிருக்கின்றன.

பெரும் பகுதி வாக்காளர்கள் மலாயாக்காரர்களாயிருந்தும், சிறுபான்மையினரான சீனர்களும், இந்தியர்களும் ஒரு கூட்டணியின்கீழ் நின்று சில இடங்களைப் பெற்றிருப்பது, இந்த இரு சாராரும், மலாயா மக்களுடன் கொண்டிருக்கும் நல்லுறவுக்கு ஒரு எடுத்துக்காட்டு என்று கூறப்படுவதில் ஆச்சரியமொன்றுமில்லை.

தீவிர மலாயாவாதிகளின் படுதோல்வி, இந்த நல்லுறவு நிலவுகிறது என்பதற்கு சான்றாக அமைந்திருப்பதாயும் கருத்தறிவிக்கப்பட்டிருக்கிறது.

எப்படி இருப்பினும், 52 இடங்களுள்—51 இடங்களில் 'மூவர் கூட்டணி' வெற்றி பெற முடிந்ததற்குக் காரணம் கூட்டணியின் 'விரைவில் முழு சுதந்திரம்' என்ற இலட்சியம்தான் என்பதை, தேர்தலை நடத்த முன் வந்த வெள்ளை ஆட்சியாளர்கள் உணர்ந்தாக வேண்டும்.

'1959-க்குள்ளாக, மலாயா முழுச் சுதந்திரம் பெற்ற நாடாக விளங்க வேண்டும்' என்ற கூட்டணியின் குரல், மலாயாவில் வாழும் எல்லா இன மக்களின் ஒருமுகமான குரலாகும்.

நாட்டில் இப்போது 'நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது — 'பயங்கரவாதிகள்' என்று அழைக்கப்படுவோரின், தாக்குதலைச் சமாளிக்க—என்ற காரணங்காட்டி!

வெற்றி பெற்றுள்ள கூட்டணியின் தலைவர் தெங்கு அப்துல் ரஹ்மான், "நெருக்கடி நிலையை அகற்றுவதற்காக, 'பயங்கரவாதிகள்' என்று அழைக்கப்படுவோர் அத்தனை பேருக்கும் மன்னிப்பு—அபயம் வழங்கிவிட வேண்டும்; அந்த அபயத்தை ஏற்றுக்கொண்டு பயங்கரவாதிகளென அழைக்கப்படுவோர் தங்களின் 'நடவடிக்கைகளை'க் கைவிட்டுவிட வேண்டும்; இல்லாவிடில் அவர்கள் அத்தனை பேரும் பூண்டோடு அழிக்கப்படுவர்," என்பதாக ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்.

இந்த நெருக்கடி நிலையை அகற்றும் கூட்டணித் தலைவரின் திட்டத்தைக்கூட. பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவர்கள் சுதந்திரம் வழங்கும் முறையையேகூட மலாயா மக்கள் சந்தேகிப்பர்.

எனவே, பிரிட்டிஷார், மலாயா மக்களின் ஏகக் குரலுக்குச் செவிசாய்த்து, கூட்டணி அமைக்கும் மந்திரி சபையுடன் ஒத்துழைத்து, மலாயாவுக்கு சுதந்திரம் வழங்குவதின் மூலம்தான், தங்களை விவேகமானவர்கள் — காலத்தைப் புரிந்துகொண்டவர்கள் என்று பிறர் கருத இடமளிக்க முடியும். அந்த நிலைக்கு, பிரிட்டிஷார் தங்களைத் தயார் செய்துகொள்வார்களா? அல்லது, 'பிரிட்டிஷ் கயானா போக்கி'லேயே போய்க் கொண்டிருப்பார்களா என்பதை, வரையறுத்துக் கூற இன்னும் சிறிது நாள் போகவேண்டாமா?

இந்துமத நம்பிக்கையைப் புண்படுத்துகிறதாம்!

புத்தகம் பறிமுதல்

புதுடில்லி, ஜூலை 30—

இங்கிலாந்தில் அச்சிடப்பட்டு பிரசுரிக்கப்பட்ட 'இராமன் கதை திரும்பச் சொல்லப்படுகிறது' என்ற புத்தகத்தைத் தடைசெய்து டில்லி பிரதம கமிஷனர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

ஆபரி மேனன் என்பவர் எழுதிய இந்தப் புத்தகம், இந்துமத நம்பிக்கை கொண்டவர்களைப் புண்படுத்துவதாக உள்ளது என்று தடை உத்தரவில் கூறப்பட்டிருக்கிறது.

இப்புத்தகங்களின் பிரதிகளைப் பறிமுதல் செய்யவும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

பெங்களூருக்கும் — சேலத்திற்கும் இடையே 144 மைல் தூரத்திற்கு 'மீட்டர் கேஜ்' அல்லது 'பிராட் கேஜ்' இருப்புப்பாதை போடுவதற்கு, எஞ்சினீயரிங் 'சர்வே' நடத்துமாறு இரயில்வே போர்டு அனுமதித்துள்ளதாம். இப்பாதை, பெங்களூரிலிருந்து ஓசூரைத் தொடர்ந்து, தர்மபுரி வழியாக சேலம் செல்லும்.

பல்கலைக் கழகப் படிப்பு பற்றி புதிய திட்டம்

விளக்கம் வேண்டுமென தலைமை ஆசிரியர்கள் கோரிக்கை!

சென்னை, ஜூலை 31—

"இடைநிலைக் கல்லூரி வகுப்பை (இண்டர்மீடியேட்) ஒழித்துவிட பல்கலைக் கழகம் முடிவு செய்திருப்பதை ஒட்டி, 1956-ல், பள்ளி இறுதி வகுப்பு (எஸ். எஸ். எல். சி.) பரீட்சையில் தேறும் மாணவர்கள், அடுத்து, தொடர்ந்து கல்வி பயில என்ன செய்வார்கள்—என்ன செய்யவேண்டும் என்ற கேள்வி பிறந்துள்ளது;

"1956-ல் பள்ளி இறுதி வகுப்புப் பரீட்சையில் தேறும் மாணவர்கள், தொழிற்கல்விக்கான படிப்பினை மேற்கொள்ள, 1957-ல் ஒன்றும், 1958-ல் ஒன்றுமாக இரண்டு சர்க்கார் பரீட்சைகள் எழுத வேண்டுமா?—தொழிற்கல்லூரிகளிலா, அல்லது கலைக் கல்லூரிகளிலா?—எங்கு, இந்த தொழிற்கல்வி வகுப்புகள் நடைபெறும்?—பல்கலைக் கழக வகுப்பிற்கு முந்திய வகுப்பின் இறுதிக் கட்டத்திலா மாணவர்கள், தாங்கள் எந்தத் தொழிற் கல்வி பெறுவது என்பது குறித்து முடிவு செய்வார்கள்?"

—என்பன போன்ற கேள்விகளுக்கு விளக்கம் தருமாறு சென்னை நகர உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்கள் மாநாட்டின் மூலம் பல்கலைக் கழகத்தவரைக் கேட்டிருக்கின்றனர்.

மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய குருவில்லா ஜாகப் கூறியதாவது:—

"இப்போது பள்ளி இறுதி வகுப்பில் பயிலும் மாணவர்களின் எதிர்காலம் பற்றி அவர்களுக்கு அறிவுரை கூற வேண்டிய பொறுப்புடைய ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழகத்தின் புதிய திட்டம் பற்றிய போதுமான விளக்கம் கிடைக்கவில்லை;

"இப்போது ஆறும் படிவத்தில் பயிலும் மாணவர்கள் பரீட்சையில் தேறியதும், ஒரு வருடத்திற்கு, பல்கலைக் கழக வகுப்புக்குத் தயாராவதற்காக ஓராண்டு பயில வேண்டும் என்றும், அந்த ஓராண்டு காலத்திற்குப் பிறகு, மூன்று ஆண்டு பட்டப் படிப்பு, அல்லது நான்கு ஆண்டு 'ஆனர்ஸ்' படிப்பு அல்லது பல்வேறு தொழிற் பட்டப்படிப்புக்கான தயாராகும் படிப்பு முதலியனவற்றை மேற்கொள்ள வேண்டும் என்றும் பல்கலைக் கழகத் திட்டம் கூறுகிறது;

"இந்த விளக்கம் போதுமானதாக இல்லை; இந்த பலவகைப் பட்டப் படிப்புகள் பற்றியும், மாணவர்களும், பெற்றோர்களும், ஆசிரியர்களும், விளக்கமான விவரங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள்.

"பல்கலைக் கழக அதிகாரிகள் அந்த விவரங்களைத் தெளிவாக்குவார்கள் என இந்த தலைமை ஆசிரியர்கள் மாநாடு எதிர்பார்க்கிறது."

சில ரகக் கைத்தறித் துணிகளுக்கு......

ரூபாய்க்கு இரண்டணாதள்ளுபடி

விரைவில் விற்பனையாகாத சில ரகக் கைத்தறித் துணிகளுக்கு, ரூபாய்க்கு இரண்டணா தள்ளுபடி தருவதற்கு சென்னை மாநில கைத்தறி நெசவாளர் சங்கத்துக்கு சென்னை சர்க்கார் அனுமதித்துள்ளதாம். இச்சலுகை செப்டம்பர் வரை அமுலிலிருக்கும். இதுவரையில் ரூபாய்க்கு 1½ அணாதான் எல்லாத் துணிகளுக்கும் தள்ளுபடி தரப்பட்டு வருகிறது.

இந்திய அலுவலக புத்தகசாலை

கோரிக்கையை மீண்டும் ஆசாத் வற்புறுத்துகிறார்

புதுடில்லி, ஜூலை 30—

"லண்டனில் உள்ள இந்திய அலுவலகப் புத்தகசாலை, இந்தியாவுக்குத்தான் சொந்தமானது; பிரிட்டன் இதுபற்றி தனது கருத்தை திடீரென மாற்றிக் கொண்டிருப்பது ஆச்சரியத்திற்குரியதாகும்; இந்தியா அலுவலக புத்தகசாலை, இந்தியாவுக்கும்—பாகிஸ்தானுக்கும்தான் சொந்தமானது என்பதில் இரு சர்க்கார்களுக்கும் கருத்து வேறுபாடு இல்லை; புத்தகசாலை இந்தியாவுக்குச் சொந்தமென்பதிலும், அந்தப் புத்தகசாலையில் உள்ள முக்கியமான புத்தகங்கள், கையெழுத்துச் சுவடிகள் முதலியனவற்றின் நகல்களை பாகிஸ்தான் எடுத்துக்கொள்ளலாம்; மேலும் தேவையானவற்றின் புகைப்பட நகல்களையும் பெற்றுக்கொள்ளலாம்—என்பதில், இரு சர்க்கார்களுக்கும் பொதுவான உடன்பாடு இருக்கிறது என்றும், ஆனால் இதுபற்றி, எழுத்து மூலமான உடன்படிக்கை எதுவும் இல்லை," என்றும் இந்திய கல்வி மந்திரி மௌலானா ஆசாத் தெரிவித்திருக்கிறார்.

இந்த புத்தகசாலை பற்றி தாம் இன்னும் பிரிட்டிஷ் காமன்வெல்த் மந்திரி ஹோம் என்பாருடன் கடிதப் போக்குவரத்து வைத்திருப்பதாயும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அல்ஜீரியா - மொராக்கோ

ஐ.நா. சபை விவாதிக்கவேண்டும் என கோரிக்கை

மொராக்கோ, அல்ஜீரியா ஆகிய காலனிகளின் பிரச்சினை குறித்து ஐ. நா. பொதுச்சபை விசாரிக்க வேண்டுமென ஆசிய - ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த 13 உறுப்பினர்கள் கையொப்பமிட்டு, ஐ. நா. சபை பொதுச் செயலாளரிடம் கோரிக்கை தாக்கல் செய்திருக்கின்றனர்.

அந்த இரு காலனிகளிலும் இப்போது நிலைமை வெகு நெருக்கடியாகிவிட்டிருப்பதாயும், அந்த நெருக்கடி நிலை அந்தப் பகுதியில் நிலவும் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய வகையில் உருவாகிவிடும் ஆபத்து இருப்பதாலும் உடனே அது பற்றி ஐ. நா. விவாதித்து, பிரச்சினைக்கு முடிவு செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

சுதந்திர கோரிக்கையைக் கைவிட்டால்......

பேச்சுவார்த்தை நடத்த தயாராம்!

நாகர் தனி நாடு கிளர்ச்சிக்கு இந்திய சர்க்காரின் பதில்

புதுடில்லி, ஜூலை 31—

மலைஜாதியினர் வாழும் பகுதியிலிருந்து இந்தியக் குடிகளின் எந்தத் தூதுக் குழுவினராலும், தங்கள் குறைகளைச் சொல்லிக்கொள்ள வருவதானால் அக்குழுவைச் சந்திக்க சர்க்கார் தயாராக உள்ளதாம்.

பலாத்கார முறைகளை வெளிப்படையாகக் கண்டித்து சுதந்திரம் வேண்டுமென்ற கோரிக்கையை கைவிட்டால்தான் இது சாத்தியம் என்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாகர் தேசியக் கவுன்சிலிலுள்ள சில தீவிரவாதிகள்தான் இந்த பலாத்கார வேலைகளுக்குக் காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தித் திட்டப் பிரதேசங்களில், சிறு தொழில்கள், கிராமத் தொழில்கள் ஆகியவற்றின் அபிவிருத்திக்கான வேலை நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் சிப்பந்திகளுக்குப் போதிய அளவு பயிற்சி அளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்காக வகுக்கப்பட்டுள்ள சமுதாய அபிருத்தித் திட்ட நிர்வாக நிறுவனத்தின் தீவிர வேலைத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும், 500 வட்டார அடிப்படை பரவல் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுவரும்.

ம.சோ. கட்சியில் பிளவு அதிகரிப்பு

அ. இ மக்கள் சோஷலிஸ்டு கட்சியிலிருந்து விலகி, இனி, 'சோஷலிஸ்டு கட்சி' என்ற பெயருடன் இயங்குவதென புது டில்லியில் நடைபெற்ற டில்லி மாநில மக்கள் சோஷலிஸ்டு கட்சியின் இரண்டாவது வருடாந்திர மாநாடு தீர்மானித்துள்ளது.

சென்னையிலும் சலசலப்பு

அ. இ. மக்கள் சோஷலிஸ்டு கட்சியிலிருந்து விலகிவிட சென்னை நகர ம. சோ. கட்சியும் தீர்மானித்துள்ளது. டாக்டர் லோகியா ஒரு அ. இ. கட்சியை அமைக்கும் வரையில், இது, 'சென்னை சோஷலிஸ்டு கட்சி' என்ற பெயரில் இயங்கி வருமாம்!

கல்கத்தாவில்........!

டாக்டர் லோகியா மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதை ஆட்சேபித்து, 200 மேற்கு வங்க ம. சோ. கட்சி உறுப்பினர்கள், நரேந்திர தேவுக்கு பகிரங்கக் கடிதம் எழுதியுள்ளனராம்.

மைசூரில் கண்டனக் குரல்

டாக்டர் லோகியா மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமைக்கு மைசூர் மாநில ம. சோ. நிர்வாகக் குழு கண்டனம் தெரிவித்துள்ளது. அது நிறைவேற்றியுள்ள தீர்மானமொன்றில், 'இது எதேச்சாதிகாரப் போக்கு' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆந்திராவில் ஆர்ப்பரிப்பு

டாக்டர் லோகியா, மதுலிமாயி போன்றவர்களை 'சஸ்பெண்டு' செய்துள்ளதை ஆட்சேபித்து, ஆந்திர ம. சோ. கட்சி நிர்வாகக் குழு கூட்டத்தில், பொதுக் காரியதரிசி கொண்டுவந்த தீர்மானத்தை தலைவர் அனுமதிக்காததால், கூட்டம் தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ரூ. 13,000 பெறுமான வைர ஆபரணம்

பஸ் கண்டக்டரால் கண்டு பிடித்துத் தரப்பட்டது

பம்பாய், ஜூலை 29—

சுமார் ரூ 13,000 மதிப்புடைய வைர 'நெக்லெஸ்' ஒன்று, ஒரு பஸ்ஸில் அதன் கண்டக்டரால் கண்டுபிடிக்கப்பட்டதாம்.

சையத் உசேன் என்ற அந்தக் கண்டக்டர், 'பெஸ்ட்' பஸ் நிறுவனத்தின் கெட்டுப்போன சாமான்களுக்கான நிலையத்தில் அதனைத் தந்தார்; உடனே அந்நிறுவனத்தார் கண்டக்டரால் தங்களிடம் தரப்பட்ட 'நெக்லெஸ்' பற்றி போலீசாருக்குத் தகவல் தந்தனர்.

ஏற்கனவே அதுபற்றி தேடிக் கொண்டிருந்த போலீசார், அதனைப் பெற்று, உரியவரிடம் சேர்ப்பித்திருக்கின்றனர்.

பஸ் ஒன்றில் பிரயாணம் செய்கையில் அந்த ஆபரணம் காணாமற் போய்விட்டதாக போலீசில் ஒரு வியாபாரி தகவல் தந்திருந்தார்.

சிறையில் பெண்மணி மரணம்!

ரூ. 10,000 பெறுமான நகைகள் திருடியவராம்!

ஆக்ரா, ஜூலை 30—

ஆக்ரா சிறையில் நகர நீதிபதி ஒருவரால் காவலில் வைக்கப்பட்டிருந்த திருமதி மார்ஜொரி ஷெண்டன் என்ற 35 வயதுப் பெண்மணி இறந்துவிட்டாராம்

இன்ன இனத்தவர் என்று தெரியாத அந்தப் பெண்மணி, கடந்த செவ்வாயன்று, டெல்லியில் உள்ள ஒரு நகைக் கடையிலிருந்து ரூ. 10,000 பெறுமான நகைகளுடன் கம்பி நீட்டியதாகவும், அன்றே அந்தப் பெண்மணியை ஆக்ராவில் டெல்லி போலீசார் கைது செய்ததாகவும் கூறப்படுகிறது. அந்தப் பெண்ணிடம் திருட்டுப்போன நகைகள் பெரும் பகுதி இருந்ததாகவும், அவை பறிமுதல் செய்யப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

"சிலுவைப் போர்" நடத்த அனுமதி!

சோவியத் அழைப்பை ஏற்க அமெரிக்கப் பாதிரியார் நிபந்தனை!

டோரன்டோ, ஜூலை 30—

அமெரிக்க கிறிஸ்தவ பாதிரியான பில்லி கிரகாம் என்பார், சோவியத் ரஷ்யாவிற்கு வருகை தருமாறு அதிகாரபூர்வமாக அழைக்கப்பட்டிருக்கிறார் என்று அவரது குழுவில் உள்ள உறுப்பினர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

கடந்த வாரத்தில், லண்டனில் நடைபெற்ற உலக கிறித்துவ ஞான நீராட்டுக் கூட்டத்தில், பில்லி கிரகாம் பேசுகையில், அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த சோவியத் கிறித்துவர் தூதுக்குழு, கிரகாமுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

சோவியத் யூனியன் முழுவதிலும் ஒரு 'சிலுவைப் போர்' நடத்த தம்மை அனுமதிப்பதானால் தான் அழைப்பை ஏற்றுக்கொள்ள முடியும் என்று அவர் தெரிவித்திருக்கிறாராம்; இதற்காக, அவர் சோவியத் சர்க்காரின் பதிலை எதிர்பார்த்திருப்பதாகக் கூறப்படுகிறது.

★

பார்வையிட அனுமதிக்கப்படாத நகரில் கனடா அமைச்சர்

விளாடிவாஸ்டாக் என்ற துறைமுக நகரைப் பார்வையிட கனடாவின் மீன் இலாகா மந்திரியான ஜேம்ஸ் சின்க்ளேயர் சோவியத் சர்க்காரால் அனுமதிக்கப்பட்டார் என்று தெரிகிறது.

இந்த விளாடிவாஸ்டாக் நகரம் எவருக்கும் பார்வையிட அனுமதிக்கப்படாத நகரமாம்.

டிரான்ஸ்—சைபீரியன் இரயில்வேயின் 'எக்பிரஸ்' இரயிலில் பிரயாணம் செய்யும் நேர் பிரயாணிகளைத் தவிர வேறெந்த அன்னிய நாட்டவரும் இந்த நகருக்குள் நுழைய அனுமதிக்கப்படுவதில்லையாம்.

ரஷ்யாவுக்குச் செல்கின்றனர்!

ரஷ்யாவுக்குச் செல்லும் பிரயாண விதிகளை தற்போது சோவியத் நாடு பொதுவாகத் தளர்த்தி விட்டதால், இந்தக் கோடையில், இது வரையில் சென்றிராத அளவில், அமெரிக்க சட்டசபை உறுப்பினர்கள் ரஷ்யாவைச் சுற்றிப் பார்க்க செல்லக் கூடுமாம்!

நகர சபை உறுப்பினர் மீது குற்றச்சாட்டு

பொது வண்டியை சொந்த வேலைக்கு உபயோகித்தனராம்

பீஜப்பூர், ஜூலை 30—

நகர சபைக்குச் சொந்தமான 'டிரக்' ஒன்றை அனுமதியின்றி, சில நகர சபை உறுப்பினர்களும், பிரதம அதிகாரியும் உபயோகித்ததாக, அவர்கள் மீது, பீஜப்பூர் மாவட்ட அதிகாரியிடம் ஒரு உறுப்பினர் புகார் தாக்கல் செய்துள்ளார் என்று தெரிகிறது.

"கக்கூஸ்களுக்கான 500 இரும்புத் 'தட்டு'க்கள் பட்டுவாடா செய்வதற்கான விலைப்புள்ளியை அங்கீகரித்தது, ஒழுங்கான முறையில் நடைபெறவில்லை; விலைப் புள்ளிகள் கோருவது பற்றி பத்திரிகைகளில் சரியான விளம்பரம் செய்யப்படவில்லை; இது, சட்டப்படி நகர சபை செய்திருக்கப்படவேண்டிய ஒன்றாகும்; அப்படிச் செய்தது நகர சபைச் சட்டத்திற்கு விரோதமான செயலாகும்," என்று, வேறொரு உறுப்பினர் மாவட்ட அதிகாரியிடம் புகார் செய்துள்ளதாகத் தெரிகிறது.

"உயர்தர சுகாதார இன்ஸ்பெக்டர், மருத்துவ அதிகாரியின் வேலையையும் சேர்த்துப் பார்த்துக் கொள்வதற்காக அவருக்கு மாதம் ரூ 100 அதிகச் சம்பளம் தர உத்தரவிட்டிருப்பது, முனிசிபல் சட்டத்தின்படி தவறானதாகும்" என்றும் அந்த உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிறாராம்.

இன்சூரன்ஸ் நிறுவனங்கள்

மாநில சர்க்கார்கள் தனியாக ஆரம்பிக்குமா?

இன்சூரன்ஸ் தொழிலை சர்க்கார் உடைமையாக்குவது பற்றிய பிரச்சினை, சர்க்கார் பரிசீலனையில் வெகு காலமாக இருந்துவருகிறது. ஆனால், சில சிக்கல்கள் காரணமாக முடிவு செய்வது ஒத்திப்போடப்பட்டு வந்துள்ளது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டப் பகுதியில், முதல் நடவடிக்கையாக மாநில சர்க்கார்கள் சொந்தமாக இன்சூரன்ஸ் நிறுவனங்களை ஆரம்பித்து நடத்தும்படி கேட்டுக் கொள்ளப்படலாம்; தனி நபர் நிறுவனங்களுடன் சேர்ந்தாற்போல் இவைகளும் இயங்கி வரும்.

செய்திச் சுருள்

★

திருவள்ளுவர் விழா

27—7—55 மாலை 6 மணிக்கு, குடியேற்றம் சந்தைப்பேட்டை மக்கள் மறுமலர்ச்சி மன்ற நிர்வாக உறுப்பினர் கூட்டம், தோழர் மணி இல்லத்தில், தோழர் இராசவேலன் தலைமையில் நடைபெற்ற போது, வள்ளுவர் விழா கொண்டாடப்பட்டது.

குளித்தலை மருத்துவர் குல சங்கம்

குளித்தலை கஸ்பா பள்ளி வாசல் தெரு, பிள்ளையார் கோவிலில் 3—7—55 காலை 8 மணிக்கு, மேற்படி சங்கக் கூட்டம், திரு. ஆர். வேலாயுதம் தலைமையில் நடைபெற்றது. அப்போது, தலைவர், திருச்சி மாவட்டக் கலெக்டர் ஆர். எஸ். மலையப்பனைப் பாராட்டிப் பேசினார்.

வரவேற்பு

25—7—55ல், பொத்தனூரில், ஊராண்மைக் கழகத்தினரால், பொத்தனூர் நாட்டாண்மைக் கழக நடுநிலைப் பள்ளியினை தொடங்கி வைத்த சேலம் மாவட்ட நாட்டாண்மைக் கழகத் தலைவர் திரு. டி. எம். காளியண்ணன் அவர்கட்கு வரவேற்பளிக்கப்பட்டு, வரவேற்பிதழும் வாசித்தளிக்கப்பட்டது.

கழகச் செய்திகள்

ஒக்கரையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

24—7—55 மாலை 7½ மணிக்கு, மாரியம்மன் கோவில் திடலில் தோழர் மருதமுத்து தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் எஸ். செமொறன், சி. மாணிக்கம், அருணாசலம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

காங்கயம் தி. மு. கழகம்

24—7—55 மாலை 6 மணிக்கு, தோழர் தனிகாசலம் அவையில், தோழர் இராசலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர் எஸ். கோபால்சாமியைச் செயலாளராகக் கொண்ட புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

விழாவிற்கு தோழர் டி. எஸ். பட்டாபிராமன் தலைமை தாங்கினார். பொத்தனூர் பஞ்சாயத்துக் குழுத் தலைவர் தோழர் பி. வி. குப்பையாண்டி வரவேற்புரை நிகழ்த்தினார் மற்றும் பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர்.

'ஒரே ஆசை' — நாடகம்

24—7—55 இரவு 9½ மணியளவில் கடம்பூர் மறுமலர்ச்சி நாடக மன்றத்தாரால், தெற்கு ரத வீதி பாண்டியனார் நினைவு வெளி அரங்கில், தோழர் வே. மு. மாரியப்பா முன்னிலையில், 'ஒரே ஆசை' நாடகம் தோழர் சி. ஆ.ர் சௌந்திரராசன் பின்னணியுடன் சிறப்பாக நடைபெற்றது.

திருமணம்

30—6—55ல் அம்மையப்பன் தோழர் தங்கவேலு — கடகம்பாடி தோழியர் அலமேலு திருமணம் தோழர் என். எஸ். இளங்கோ தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. எஸ். இராமசாமி, இரா. அன்புரையன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திருமண நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ 1 நன்கொடை தரப்பட்டது— வரப்பெற்றோம்—நன்றி – பொறுப்பாளர்

தூத்துக்குடி தி.மு. கழகம் (பாளையங்கோட்டை ரோடு)

24—7—55 அன்று தோழர் அப்பாதுரை தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர் கூட்டத்தில், தூத்துக்குடி தி. மு. கழகச் சதி வழக்கில் 23 பேர்களுக்கு விடுதலையளிக்கப்பட்டமை குறித்து மகிழ்ச்சியும், இரண்டு பேர் தண்டனை விதிக்கப்பட்டதைக் கண்டித்தும், உடனடியாக அவர்களை விடுதலை செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆவடி தி. மு. கழகம்

23—7—55 மாலை 6 30 மணி அளவில், கழகப் பணிமனையில், தோழர் மைஸ்ரா தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், தோழர் பி. ஏ. இராமு தன் சொந்த அலுவல்களின் காரணமாக செயலாளர் பதவியிலிருந்தும் விலகிக் கொள்ளுவதால் அவரது விலகல் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, புதிய செயலாளராகத் தோழர் வி. மதுரை தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பாலக்கோடு தி. மு. கழகம்

27—7—55 இரவு 10 மணிக்கு பாலக்கோடு மைதானத்தில், தோழர் இரா. சகாதன் தலைமையில் கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அதுபோது பல முக்கிய முடிவுகள் செய்யப்பட்டது.

கொப்பம்பட்டியில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

28—7—55 மாலை 5½ மணிக்கு தேர் நிறுத்தத் திடலில், தோழர் சி. மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் அழகமுத்து, எம். எஸ். மணி, சி. பி. சிற்றரசு ஆகியோர், அரசியல்—பொருளாதாரம்—சமுதாயம் என்ற தலைப்புகளில் சொற்பொழிவாற்றினர்.

அன்று இரவு 10½ மணிக்கு மேல், பாரதிதாசன் நாடக மன்றத்தாரால் தோழர் சு. கணபதி தலைமையில், 'மன்னிப்பு' — எனும் நாடகம் நடைபெற்றது.

வாலாஜாபாத் இந்து மத பாடசாலை

சென்னை நிலவரி அமைச்சர் வருகை

25—7—55-ல், சென்னை மாநில நிலவரி அமைச்சர் மாணிக்கவேலரும், அவரது துணைவியாரும் வாலாஜாபாத்திற்கு வருகை தந்து, இந்து மத பாடசாலை, வள்ளலார் மாணவர் இல்லம், திருவள்ளுவர் தொழிற்சாலை ஆகியவற்றைக் கண்ணுற்றனர். பள்ளியில் நடைபெற்ற மாணவர்கள், ஆசிரியர்களடங்கிய பொதுக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்தினார். பள்ளியின் சார்பில் அன்னாருக்கு வரவேற்பு இதழ் ஒன்று வாசித்தளிக்கப்பட்டது.

அமைச்சர் மாணிக்கவேலரையும், அவரது துணைவியாரையும் படத்தில் காணலாம்.

மும்முனைப் போராட்ட நினைவு நாள்

★

சென்னை 17-வது வட்டம்

21—7—55 மாலை கழக மனையில், தோழர் ஏ. கணேசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆர். எஸ். பாண்டியன், கோ. இளவரசு, இரா. தென்னவன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இறுதியில், போராட்டத்தில் உயிர் நீத்த தோழர்களுக்கு வீர வணக்கமும், உறுப்புக்களை இழந்து வாடும் தோழர்களுக்கு அனுதாபமும் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

சென்னை-26-வது வட்டம்

24—7—55 மாலை 6½ மணியளவில் தோழர் மு. கன்னியப்பன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் இளம்பரிதி, ஏ. கணேசன், நாஞ்சில் சேவியர், இரா. தென்னவன், காசிநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர் பின்னர், போராட்டத்தில் உயிர் நீத்தத் தோழர்களுக்கு வீரவணக்கம் செலுத்தியும், தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளராக நியமனம் பெற்ற தோழர் என். வி நடராசன் அவர்களைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை-31-வது வட்டம்

17—7—55 காலை 10 மணியளவில், சென்னை 31-வது வட்டம் (கோமளீஸ்வரன்பேட்டை) கிளைக் கழகச் சார்பில் தோழர் இளஞ்சேரனாதன் இல்லத்தில், தோழர் கே எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றது. வட்டத்திலுள்ள முக்கிய வீதிகளும், கழக இல்லமும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மும்முனைப் போராட்டங்கள் குறித்து தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்

பம்பாய்—அந்தேரி

17—7—55 மாலை 4-30 மணியளவில், அந்தேரி தி. மு. கழகச் சார்பில், தோழர் ஏ. ஈ. சேயாக்கூப் தலைமையில், கழக இல்லத்தில் நடைபெற்றது. தோழர் எல். எம். பாண்டியன் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். தோழர்கள் எஸ் துரைராஜ், எஸ். முத்து, பி. அல்வி, ஆர். பி. நாதன், எஸ் கணேசன், டி. ஏ. அழகுமுத்து, வி. சுப்பையா, இரா. தஞ்சைத்துரை ஆகியோர் பேசினர். இறுதியில், போராட்டத்தில் உயிர் நீத்த வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்திக்கொண்டும், மற்றும் இரண்டு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

விவசாயிகளை வெளியேற்றும் கொடுமை

தடுக்க சட்டம் வருமெனத் தகவல்

சென்னை, ஆக 1—
"சாகுபடி செய்துவரும் குடியானவர்களை வெளியேற்றுவதைத் தடை செய்யவும், சமீப காலத்தில் வெளியேற்றப்பட்டவர்களுக்கு அவர்களது சாகுபடி உரிமையை திரும்பக் கொடுக்கவும், ஒரு மசோதா, உடனடியாக சட்டசபையின் பரிசீலனைக்கு வரவிருக்கிறது"
என்று, இருசட்டசபைகளின் கூட்டுக் கூட்டத்தில், சர்க்கார் நிலையை விளக்கிப் பேசுகையில், கவர்னர் பிரகாசா குறிப்பிட்டார்.

"எல்லா மாவட்டங்களிலும் உள்ள குடியானவர்களுக்கு, நியாய குத்தகைகள்—அல்லது 'வார'ங்களை நிர்ணயிப்பதற்கு மற்றொரு சட்டம் தொடர்ந்து வரும்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

"நில உடைமைக்கு அதிகபட்ச வரம்பு கட்டுவது, அதனுடன் சம்பந்தப்பட்ட மற்ற பிரச்சினைகள் ஆகியவற்றில், சர்க்காரின் உத்தேசங்களை அமுல் நடத்துவதில் சட்டச் சிக்கல்கள் சில இருப்பதால், அதை சர்க்கார் பரிசீலனை செய்து வருகின்றனர்," என்றும் சொன்னார்.

சட்டசபையின் இந்தக் கூட்டத்தில், மொத்தம் 13 மசோதாக்கள் வரக்கூடும்.

புதிய வரி பிரரேபணையொன்று கவர்னரது உரையில் இடம் பெற்றுள்ளது;
நீர்க்கூலி உள்பட நிலவரி மீது, 2 அணா 'சர்சார்ஜ்' (கூடுதலான வரி வசூல்) விதிக்கப்படும்; இதற்கு சட்டம் வரும்

லேவாதேவிக் கட்டுப்பாடு, இப்பொழுது பல சட்டங்களில் சிதறிக் கிடக்கிறது; அவற்றை ஒரு மசோதாவில் திரட்டிக்கொண்டு வரப்படும்.

விற்பனை வரிச் சட்டத்திற்கு அனுபவத்தையொட்டி திருத்தங்கள் செய்யப்படும்

பரிசுப் போட்டிகளைக் கட்டுப்படுத்த சட்டமியற்றுவதற்கு டில்லி ஆட்சிக்கு அனுமதியளிக்கும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படும்.

ரூ. 60 கோடியில் நெய்வேலி திட்டமாம்!

கவர்னர் உரையில் மேலும் காணப்படுவதாவது :—

நீர் ஊற்றுத் தொல்லையை சமாளித்து, நெய்வேலியில் பழுப்பு நிலக்கரிச் சுரங்க வேலையை மலிவாக நடத்த முடியும் என்ற நம்பிக்கை மிகுந்திருக்கிறதாம்; இத்திட்டத்துக்கான எல்லா நிதி பொறுப்புகளையும் டில்லி ஆட்சிபீடம் ஏற்றுக்கொண்டுள்ளதாம்; விசை உற்பத்திக்கும், அதைக் கொண்டு பல தொழில்கள் அபிவிருத்திக்கும் ரூ. 60 கோடியில் செலவாகக்கூடிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகிறதாம்.

சேலத்தில் கிடைக்கும் கனிப் பொருள்களிலிருந்து அலுமினியம் உற்பத்தி, கனரக இயந்திர சாதனங்களை உருவாக்க உருக்குப் பட்டறை அமைப்பு ஆகியவைகளை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பது பற்றி தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறதாம்.

வற்புறுத்தியுள்ளனராம்!

மத்திய ஆட்சியினர் அமைக்க விரும்பும் கனரக மின்சாரப் பண்ட உற்பத்திச்சாலையை சென்னை மாநிலத்தில் அமைக்க வேண்டிய தன் அவசியத்தை டில்லி பீடத்திடம், இம்மாநில ஆட்சியினர் வற்புறுத்தியுள்ளனராம்.

விநியோகிப்பது, சட்டரீதியான வசதிகள் அளிப்பது ஆகியவை குறித்து சென்னை சர்க்கார் விசேட மசோதா ஒன்றை வெளியிட்டிருக்கின்றனர்.

நிலங்களை வழங்க வசதி அளிப்பதும், அவ்விதம் நிலங்களை மாற்றுவது பற்றிய சட்டரீதியான செயல்களை சுலபமாக்குவதுமே இந்த மசோதாவின் முக்கிய நோக்கம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இம்மசோதாவின் மூலம், ஏற்கனவே அளிக்கப்பட்ட நிலக்கொடைகளும், சட்ட சம்மதமாக்கப்படும்.

நில சீர்திருத்தச் சட்டம் வருகிறது!

அமைச்சர் மாணிக்கவேலர் அறிவிப்பு

சென்னை, ஆக. 1—
"தற்போது நடைபெற்று வரும் சென்னை மாநில சட்டசபைக் கூட்டத்திலேயே விரிவான நிலச் சீர்திருத்த சட்டத்தின் முதல் தொகுதி கொண்டு வரப்படும்," என்று நிலவரி அமைச்சர் மாணிக்கவேலர் நிருபர்களிடை கூறியிருக்கிறார்.

குடியானவர்கள் நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுவதைத் தடுக்கவும், ஏற்கனவே வெளியேற்றப்பட்டுள்ள குடியானவர்களுக்கு மீண்டும் நிலம் கிடைக்கும்படி செய்வதற்குமான மசோதா விரைவிலேயே பிரசுரிக்கப்படுமென்றும், அது தவிர, எல்லா மாவட்டங்களிலும் நியாயமான 'வார'த்தை நிர்ணயிப்பதற்கான மசோதா ஒன்றும் தயாரிக்கப்பட்டு, விரைவிலேயே பிரசுரிக்கப்படலாம் என்றும் கூறியிருக்கிறார்.

அமெரிக்க 'ஒற்றர்'கள்

11 பேர்களை சீனு விடுதலை செய்தது!

கைது செய்து இதுகாறும் காவலில் வைத்திருந்த 11 அமெரிக்க 'ஒற்றர்'களை, சீனு விடுதலை செய்துவிட்டதாம்!

இந்த விடுதலை அறிவிப்பு ஜினீவாவில் சீன—அமெரிக்கப் பிரதிநிதிகளின் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கு சிறிது நேரத்திற்கு முன்னரேதான் அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேற்படி 11 ஒற்றர்களும் கொரியப் போரின்போது சீனுவிற்கு அருகில், அவர்களது விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்டு நெடுநாள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது அறிந்ததே.

தற்போது, அந்த அமெரிக்க ஒற்றர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனைக் காலத்திற்கு முன்னரேயே அவர்களை விடுவித்து சீனுவிலிருந்து வெளியேற்றுமாறு சீன இராணுவ நீதிமன்றம் உத்திரவிட்டிருப்பதாகத் தெரியவருகிறது அதன் பேரிலேயே மேற்கண்ட பதினொரு பேரும் விடுதலை பெற்றுள்ளனராம்

இராணுவ நீதிமன்றம் வெளியிட்ட அந்த விடுதலைக் குறிப்பில் கைதிகள் அனைவரும் சிறையில் ஒழுங்கான முறையில் நடந்து கொண்டதால்தான் அவர்கள் விடுவிக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்

★

சீன-அமெரிக்க பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை ஆரம்பம்!

ஜினீவா, ஆக 1—
சீனு—அமெரிக்கா ஆகியவற்றின் பிரதிநிதிகளிடையே, பரஸ்பர பிரச்சினைகள் குறித்துப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகி சுமார் 40 நிமிட நேரம் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

நிலக்கொடை இயக்கம்

வசதி அளிக்க சென்னை சர்க்கார் மசோதா

சென்னை, ஆக 1—
ஆச்சாரியா விநோபா பாவேயினுல ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலக்கொடை இயக்கத்திற்கு நிலங்களை

கழகக் கூட்டம்

★

சித்தன்வாழூர்

4—8—55 மாலை 5 மணிக்கு, சித்தன்வாழூர் தி. மு. கழக துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் வலக்கை அரங்கண்ணல் தலைமையில் நடைபெறும்: தோழர்கள் என். கிட்டப்பா, கே. எஸ் சௌந்தரராசன், ராதா ஆகியோர் பேசுவர்.

மலாயா மந்திரி சபை

இந்தியர் ஒருவர் இடம் பெறுவார்

கோலாலம்பூர், ஆக. 1—
அண்மையில் பொதுத் தேர்தல்கள் நடைபெற்று முதன் முதலாக அமைச்சரவை அமைக்கப்பட இருக்கும் மலாயாவில், 10 அமைச்சர்கள் மந்திரி சபையில் இடம் பெறுவர் என்றும், அவர்களில் அறுவர் மலாயர் என்றும், மூவர் சீனர் என்றும், ஒருவர் இந்தியர் என்றும், அவர்களது பெயர்கள் அடுத்த வியாழனன்று தெரிவிக்கப்படுமென்றும், மலாயா முதலமைச்சர் பதவியை ஏற்க இருக்கும் தெங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்திருக்கிறார்.

★

சுயாட்சி எப்போது?

பிரிட்டிஷ்காலனி அமைச்சரான லென்னுக்ஸ் பாய்ட் என்பாரை சிங்கப்பூர் பிரதமரான டேவிட் மார்ஷல் சந்தித்துப் பேசி, சிங்கப்பூருக்குச் 'சுயாட்சி' வழங்குவதற்கான நாளைக் குறிப்பிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நிர்வாகத்தைத் திறம்பட நடத்த!

கோராபுட் (ஒரிசா) ஜூலை 31—
பண்டித நேருகூட ஒரு சில மணி நேரம் நிலத்தில் வேலை செய்ய வேண்டுமென நான் விரும்புகிறேன்; இது, அவருக்கு, உடல், மனவளத்தை அதிகரிக்க உதவும்; நாடும் செல்வ வளர்ச்சி பெறும்;
'விவசாயிகளுடன் வேலை செய்வதினுல் உபயோகமான அரிய அனுபவங்கள் அவருக்குக் கிடைக்கும்; இதனுல் நாட்டு நிர்வாகத்தை மேலும் அவர் திறமையுடன் நடத்த இயலும்."
என்று, ஆச்சாரியா விநோபா பாவே பிரார்த்தனைக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"டில்லியிலிருந்து கொண்டு தொழில் வளர்ச்சி பற்றிப் பேசுவதால் கிராமத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படாது என்றும், கிராமங்களில் தொழில்களை வளர்க்க உண்மையில் பாடுபட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

'இந்தியர்களே! இலங்கையை விட்டு வெளியேறுக'

இலங்கை திரிசிங்கள இயக்கக் கூக்குரல்

கொழும்பு, ஆக. 1—
கொழும்பு நகரின் முக்கியமான வீதிகளிலெல்லாம், 'இந்தியர்களே! இலங்கையை விட்டு வெளியேறுக' என்று எழுதப்பட்டிருந்ததாம்.
சுவர்களில்கூட அந்த வாசகங்கள் ஏராளமான அளவில் எழுதப்பட்டிருந்தனவாம்!
இந்தியத் தூதுவராலுவலகம், இந்தியக் காட்சி சாலை, வர்த்தக நிறுவனங்கள் உட்பட பல முக்கியமான கட்டிடச் சுவர்களில் 'இந்தியரே வெளியேறுக!' என்ற குரலுக்கு 'வரிவடிவம்' தரப்பட்டிருந்ததாம்!
இந்தக் குரல், திரிசிங்கள இயக்கத்தவரால் எழுப்பப்படுகிறது என்று கூறப்படுகிறது.
அந்த இயக்கத்தின் 'சிங்களவர் முன்னேற்றம்' என்ற இலட்சியத்தினை வளர்க்கவே இந்த நடவடிக்கையாம்!

★

டில்லி ஒப்பந்தம் பற்றி கொத்தலாவலை

கொழும்பு, ஆக. 1—
இலங்கை இந்தியர் பிரச்சினையில் இலங்கை சர்க்கார் கடைப்பிடித்துவரும் நடைமுறைக் கோட்பாடுகளையும், இந்தியப் பிரதமர் நேருவுடன் இலங்கைப் பிரதமர் செய்து கொண்டுள்ள டில்லி ஒப்பந்தம் அமுல் நடத்தப்படும் விதம் குறித்தும் இலங்கைப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் மிக வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

சபையில் எதிர்க்கட்சியினரால் தெரிவித்துக் கொள்ளப்பட்ட கண்டனங்களுக்கு மறுப்பு அளிக்கும் வகையில், பிரதமர் கொத்தலாவலை, டில்லி ஒப்பந்தத்தின் விரிவான கொள்கைகளில் தமக்கும்—நேரு பண்டிதருக்குமிடையே கருத்து வேறுபாடுகள் இருந்துவருவதாகவும், இப்பிரச்சினையைப் பைசல் செய்வதற்கு வேறு மாற்று யோசனைகள் ஏதாவது தெரிவிக்கப்படுமானுல், அந்த டில்லி ஒப்பந்தத்தைத் தாம் ரத்து செய்துவிடத் தயாராக இருப்பதாகவும், ஆனுல் அந்தவிதமாக மாற்று யோசனைகளும் எதும் தெரிவிக்கப்படாமல் ஒப்பந்தத்தைமட்டும் ரத்து செய்துவிடுவதாக இருக்குமானுல் பிரச்சினைக்குப் பைசல் காணமுடியாமலேயே இருக்க நேரிடும் என்றும் கூறியிருக்கிறார்.

இந்தி மொழி பாடப் புத்தகம் வருகிறதாம்

புதுடில்லி, ஆக. 1—
இந்தி மொழி பேசப்படாத பகுதிகளில் ஒரு இந்தி மொழி பாடப் புத்தகம் தயாரிக்க டில்லி சர்க்கார் உத்தேசித்துள்ளதென்று, மக்கள் சபையில் கல்வி அமைச்சரின் பார்லிமெண்டரி செயலாளர் டாக்டர் மனமோகன் தாஸ் தெரிவித்திருக்கிறார்.

அதிகரித்துள்ள அறிவை அளந்து கூறும் அமைச்சர்

புதுடில்லி, ஆக 1—
"நான் இந்திய சர்க்கார் மந்திரியாகுமுன் நாட்டின் பொருளாதாரம் பற்றியும், பொருளாதார சம்பந்தமான விஷயங்கள் பற்றியும் ஓரளவு தெரிந்திருந்தேன்;
"மந்திரியாவதற்கு முன்பிருந்ததைப்போல, மந்திரியாகிவிட்ட இப்போது நாட்டுப் பொருளாதாரம் பற்றிய எனது அறிவு 20 மடங்கு அதிகரித்திருக்கிறது;
"இப்படி ஒரு வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தித் தந்த பிரதம மந்திரிக்கு நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்,'
என்று, வர்த்தக, தொழில் உற்பத்தி இலாகா மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, இங்கு, அகில இந்திய கைத்தறி போர்டு கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆந்திர மாநிலத்தின் இறுதித் திட்டம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கென ஆந்திர மாநில சர்க்கார் ரூ. 230 கோடிக்குத் திட்டங்கள் வகுத்துள்ளதாகவும், இந்த நகல் திட்டத்திற்கு மந்திரிசபை 'இறுதி மெருகு' கொடுத்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

உலோக ஆராய்ச்சிநிபுணர்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நாட்டு சர்க்காருடன் தொடர்பு கொள்ளும்போது தங்களுக்கு ஆலோசனை சொல்வதற்கென மத்திய சர்க்கார் அத்தகு நிபுணர் குழுக்களை வைத்திருக்கின்றனர்
—(சென்னை 'மெயில்' இதழில் காணப்படுவது)

பழைய சட்டப்படி நடைபெறும்

திருமணங்கள் செல்லாது

மக்கள் சபையில் அறிவிப்பு

புதுடில்லி, ஆக. 1—
இந்திய சர்க்காரின் புதிய திருமணச் சட்டத்தின் கீழ்தான் இனி மேல் திருமணங்கள் செய்துகொள்ள வேண்டுமென்றும், அவ்வாறில்லாமல், பழைய திருமணச் சட்டப்படி செய்துகொள்ளப்படும் திருமணங்கள் செல்லத்தக்கவையல்ல என்றும் மக்கள் சபையில் சட்ட அமைச்சர் சி. பிஸ்வாஸ் கூறியிருக்கிறார்.

'சில மாநிலங்களில், இன்னும் பழைய திருமணச் சட்டத்தின் படியே திருமணங்கள் நடைபெறுகின்றனவா?' — என்பது பற்றி மத்திய சர்க்கார், மாநில சர்க்கார்களிடம் தகவல்கள் சேகரித்துத் தருமாறு கேட்டுக் கொண்டுள்ளதாகவும், விவரம் முழுமையும் கிடைத்த பின்னர் சபையில் தெரிவிக்கப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

சணல் ஏற்றுமதி வரி

டில்லி சர்க்கார் ரத்து செய்கிறது

புதுடில்லி, ஆக. 2—
சணல் ஏற்றுமதி வரி அனைத்தையும் ரத்து செய்துவிட்டதாக இந்திய சர்க்கார் அறிவித்துள்ளனர். சர்க்காரின் இந்த உத்திரவு இன்று முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

சென்ற இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் சணலுக்கும், அதனைக்கொண்டு செய்யப்பட்ட பிற பொருள்களுக்கும் ஏற்றுமதி வரி இல்லாமல் இருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இதுவரையில் சணல்கோணிக்கு 1 டன்னுக்குரூ 80 வீதமும் 'ஹெசியனுக்கு ரூ. 120 வீதமும் ஏற்றுமதி வரி விதிக்கப்பட்டு வந்தது.

இந்த சணல் பொருட்கள் ஏற்றுமதி வரியை ரத்து செய்துவிட்டதின் பலனுக, இந்திய சர்க்காருக்கு ரூ 5 கோடி சுமாருக்கு வருமானம் நஷ்டம் ஏற்படக் கூடுமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

பாரிசில் ஒரு இந்தியா இல்லம்

இதர ஐரோப்பிய, ஆசிய, அமெரிக்க மாணவர்களுக்காக பல்வேறு நாடுகளின் சர்க்கார்கள் கட்டியிருப்பதைப் போன்றே பாரிஸ் பல்கலைக் கழகத்திற்கு அருகில் இந்திய மாணவர்களுக்காக, ஒரு 'இந்தியா இல்லம்' அமைக்க இந்திய சர்க்கார் உத்தேசித்திருக்கின்றனராம்.

இதற்காக, பிரெஞ்சு சர்க்கார் நல்லதோர் இடம் ஒதுக்கித் தந்திருக்கிறார்களாம்.

அண்மையில் இந்திய அரசாங்க கல்வி மந்திரி மௌலானா அபுல் கலாம் ஆசாத் பாரிஸ் சென்றிருந்தபோது, பிரெஞ்சு கல்வி மந்திரியைச் சந்தித்து, இதுபற்றிப் பேசியதாகத் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன் எம். ஏ